பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 01 2025 **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை முழுவீச்சில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. நகர்ப்புற வளர்ச்சிக்கான சீரிய திட்டங்களை மத்திய அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.
3. தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள் மன அழுத்தத்தை தவிர்ப்பதற்கான பயிற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கேட்டுக்கொண்டுள்ளார்.
4. மகளிரின் பங்களிப்புடன் கூடிய அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டநேர இறுதியில் இந்தியா 6 விக்கெட் இழப்புக்கு 141 ரன் எடுத்துள்ளது.

*-- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<>>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை முழுவீச்சில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றின் தலைமைச்செயல் அதிகாரி திரு விஷால் சிக்கா, தம்மை சந்தித்து பேசியபின் பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் இந்த தொழில்நுட்பத்தின் மூலம், கிடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

நாட்டின் அணு ஆயுத திட்டங்களில் நீண்டகாலம் முக்கிய பங்காற்றிய விஞ்ஞானி டாக்டர் ஆர் சிதம்பரம் இன்று மும்பையில் காலமானார். அவருக்கு வயது 88.

வயது மூப்பு மற்றும் உடல்நலம் குன்றியதால் சிறிது காலம் மும்பை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவரின் உயிர் இன்று காலை பிரிந்தது.

1974 மற்றும் 1998-ஆம் ஆண்டுகளில் பொக்ரானில் நடத்தப்பட்ட அணு ஆயுத சோதனை திட்டங்களை டாக்டர் சிதம்பரம் முன்நின்று நடத்தியவர்.

மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகராகவும், பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் தலைவராகவும், அணுசக்தி கமிஷனின் தலைவராகவும் அவர் முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

1999-ஆம் ஆண்டு டாக்டர் ஆர் சிதம்பரத்துக்கு பத்மவிபூஷன் விருது வழங்கப்பட்டது.

ஏற்கனவே, 1975-ஆம் ஆண்டு அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

அணு விஞ்ஞானி டாக்டர் ஆர் சிதம்பரம் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்தியில், இந்தியாவின் அணுசக்தி திட்டங்களை உருவாக்கிய சிற்பி என்று அவருக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

நாட்டின் அறிவியல் தொழில்நுட்பத்திறனை வலுப்படுத்துவதற்கு அவர் ஆற்றிய பணி மகத்தானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர் ஆர் சிதம்பரத்தின், அறிவியல் சேவைக்கு நாடு என்றும் கடமைப்பட்டுள்ளது என்றும், வருங்கால சந்ததியினரும் அவரை நினைவில் கொள்வார்கள் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

நகர்ப்புற வளர்ச்சிக்கான சீரிய திட்டங்களை மத்திய அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லி லஷ்மிபாய் நகரில் இன்று பணிபுரியும் மகளிருக்கான சுஷ்மா பவன் விடுதியை திறந்துவைத்து பேசிய அமைச்சர், மகளிர் மேம்பாட்டிற்காக அரிய சேவைகள் புரிந்த மறைந்த முன்னாள் அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நினைவாக இந்த விடுதி தொடங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

தேசிய சீர்மிகு நகரங்கள் இயக்கத்தின்கீழ், நாட்டில் உள்ள நகரங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்த அமைச்சர், அருகில் உள்ள கிராமங்களில் இருந்து அதிக அளவில் நகரங்களுக்கு வரும் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருவதாக கூறினார்.

நகர்ப்புறங்களில் பாதுகாப்பை வலுப்படுத்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அதிக அளவில் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நகர்ப்புறங்களில் மெட்ரோ ரயில் சேவை, மின்சாரத்தால் இயங்கும் வாகனங்கள், பிரதமரின் சூரியசுர் மின் திட்டம் போன்றவற்றை நகர்ப்புற வளர்ச்சிக்காக மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<<>>>>>

மகளிரின் பங்களிப்புடன் கூடிய அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சித்துறையின் 40-வது நிறுவன நாள் விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர், தொழில் வளர்ச்சிக்கான புதிய திட்டங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை கொண்டுவருவதில் இந்த துறை சிறப்பாக செயலாற்றி வருவதாக கூறினார்

உள்நாட்டு தொழில்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் இந்த துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்பங்களை உள்நாட்டிலேயே உருவாக்கி, பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் இந்த அமைப்பு மேற்கொண்டுவருகிறது என்றும் மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<<<>>>>>

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை நிலை நாட்ட மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இன்று மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த மண்டல மையத்தை திறந்துவைத்து பேசிய அவர், மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்காக தரமான சேவைகளை அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் நோக்கில், இந்த மையம் அமைக்கப்படுவதாக தெரிவித்தார்.

நாடு முழுவதும் இதேபோன்று, 25 மண்டல மையங்கள் செயல்பட்டு வருவதாக கூறிய அவர், மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு, கல்வி, திறன் மேம்பாடு, சமூக ஒருமைப்பாடு உள்ளிட்ட ஒருங்கிணைந்த சேவைகளை வழங்கி வருவதாக குறிப்பிட்டார்.

மதுரையில் மாற்றுத்திறனாளிகளுக்கான மண்டல மையம் அமைக்கப்பட்டுள்ளதையடுத்து, அவர்களுக்கான சேவை தங்கள் வீடுகளுக்கு அருகிலேயே கிடைப்பதற்கு வழிபிறந்துள்ளதாக தெரிவித்தார்.

இந்த மையம் சிறப்பாக செயல்படுவதற்கு மாநில அரசு அதிகாரிகள், பொதுமக்கள், உள்ளிட்ட அனைத்துத்தரப்பினரும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் திரு வீரேந்திர குமார் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>

தேர்வுக்கு தயாராகும் மாணவ, மாணவியர் மன அழுத்தத்தை தவிர்ப்பதற்கான பயிற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் இன்று **Exam Warriors** கலைத்திருவிழாவில் மாணவர்களுடன் கலந்துரையாடிய அமைச்சர், விளையாட்டு வீரர்களும், நடிகர்களும், முழு ஈடுபாட்டுடன் தங்களது பணியை மேற்கொள்வதாக கூறினார்.

அவர்களை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு, மாணவர்கள் தங்களது படிப்பில் முழு ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தில்லியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சியில் நாடு முழுவதிலும் இருந்து ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

இவ்விழாவையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள காணொலி பதிவில், லட்சியத்தோடும், எதிர்பார்ப்புகளோடும் தேர்வுகளை எதிர்கொள்ள வேண்டும் என்றும், தேர்வு குறித்த அச்சத்தை முழுவதுமாக தவிர்த்துவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாணவர்கள் தங்களது வாழ்க்கை பாதையை அமைத்துக்கொள்ள ஏராளமான வாய்ப்புகள் குவிந்துகிடப்பதாக குறிப்பிட்ட பிரதமர், அவற்றை அடைவதற்கான முயற்சிகளை அயராது மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

<<<<<<<>>>>>

38-ஆவது தேசிய விளையாட்டு போட்டிகளுக்கான தேஜஷ்வினி ஜோதி இன்று உத்தராகண்ட் மாநிலம் பாகேஷ்வர் சென்றடைந்தபோது விளையாட்டு வீரர்களும், ரசிகர்களும் அன்பான வரவேற்பு அளித்தனர்.

மாவட்ட அளவிலான விளையாட்டுத்துறை அதிகாரிகளும் இதில் இடம்பெற்றிருந்தனர்.

உத்தராகண்ட் மாநிலம் முதல் முறையாக தேசிய விளையாட்டுப்போட்டிகளை நடத்துகிறது.

அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி, கடந்த மாதம் 26-ஆம் தேதி ஹல்துவானியில் தேஜஷ்வினி ஜோதியை கொடியசைத்து அனுப்பிவைத்தார்.

இம்மாதம் 25-ஆம் தேதி உத்தராகண்டின் 13 மாவட்டங்களில் உள்ள 99 இடங்கள் வழியாக இந்த ஜோதி டேராடூன் சென்றடைகிறது.

<<<<<<<>>>>>

*__விளையாட்டுச் செய்திகள்__*

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று இந்தியா 2-வது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் 6 விக்கெட் இழப்புக்கு 141 ரன் எடுத்துள்ளது.

சிட்னியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இந்தியா முதல் இன்னிங்சில் 185 ரன்னுக்கும், ஆஸ்திரேலியா 181 ரன்னுக்கும் ஆட்டமிழந்தது.

--------------

ஆக்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின், தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் அடுத்த சற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-----------

இந்தூரில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Parikshit Somani – Dhakshineswar Suresh** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில், பிரான்சின் **Mathys Erhard -** இங்கிலாந்தின் **Alastair Gray** இணை காயம் காரணமாக வெளியேறியதையடுத்து, இந்திய இணை வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

------------

ரூர்கேலாவில் நடைபெற்றுவரும் ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் தில்லி - பெங்கால் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்றுவருகிறது.

ஹைதராபாத் அணி – ஒடிசா அணிகளுக்கு இடையேயான மற்றொரு ஆட்டம் இரவு மணி 8.15-க்கு தொடங்குகிறது.

-----------

**I.S.L** கால்பந்து போட்டியில் புவனேஷ்வரில் கோவா – ஒடிசா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

ஜம்ஷெட்பூரில் இரவு ஏழரை மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு ஆட்டத்தில் ஜாம்ஷெட்பூர் - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<<END>>>>>